**அ.வ.எண்: 84/2023** **நாள்: 23.09.2025**

வா.சா.1 – சின்னையா

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. தாவா வழக்கை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் பாதை கேட்டு தாக்கல் செய்தேன். தாவா வழக்கின் பிரதிவாதிகள் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரைக்கு நான் கூடுதல் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றார் சரிதான். நான் எந்தெந்த சர்வே எண்களில் பாதை கோரியுள்ளேன் என்றால் சர்வே எண் 411/6, 7, 8 இல் பாதை கோரியுள்ளேன். . சர்வே எண் 411 இல் மொத்த விஸ்தீரணம் என்ன என்றும் அதில் நான் எந்த திசையில் எவ்வளவு அடி அகலம் எவ்வளவு அடி நீளத்திற்கு பாதை கோரியுள்ளேன் என்ற விபரமும் எனது பிராது மற்றும் நிரூபன வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். நான் எந்த சர்வே எண்ணில் இருந்து எந்த சர்வே எண் வழியாக பாதை கோரியுள்ளேன் என்ற விபரம் எனது பிராதியிலும் நிறுவன வாக்குமூலத்திலும் இல்லை என்றால் சர்வே எண் 74/59 இல் வீடு உள்ளது அதிலிருந்து தான் பாதை கோரியுள்ளேன்.

2. மேற்படி சர்வே எண் 74/59 நஞ்சை நிலம் என்றால் சரிதான். பொதுவாக நஞ்சை நிலத்தில் விவசாயம் தான் செய்ய வேண்டும் என்றும் அதில் வீடுகள் கட்டக் கூடாது என்றும் சொன்னால் சரியல்ல இடம் இல்லாத காரணத்தால் வீடு கட்டி உள்ளேன். . மேற்படி சர்வே எண் 74/59 ஆனது எனக்கு வாசாஆ1 மூலம் கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான் நான் மேற்படி சொத்தை 2003 ஆம் ஆண்டு தான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான் நான் எந்த ஆண்டில் வீடு கட்டினேன் என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. வாசாஆ1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் எந்த திசையிலும் பாதை என்று காட்டப்படவில்லை என்றால் (சாட்சி இடம் வாசாஆ1 காட்டப்பட்டது) சாட்சி தனக்கு படிக்க தெரியாது என்று குறிப்பிட்டார். சர்வே எண் 411

பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

3. சர்வே எண் 74/59 லிருந்து சர்வே எண் 411 வழியாக பாதை வேண்டும் என்று நீதிமன்றத்திற்கு காட்டுவதற்காக நான் மாதிரி வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு சர்வே எண்களுக்கும் உரிய கிராம புலப்பட நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்துக்களின் சொரூப அமைப்பை நீதிமன்றத்திற்கு காட்டுவதற்கு நான் புகைப்படங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை தான் நாங்கள் பாதையாக பயன்படுத்தி வருகிறோம் என்பதை நிரூபிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் மூலம் சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை அளப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 411 வழியாக எனக்கு பாதை வேண்டும் என்று நான் வருவாய் துறை அதிகாரிகளிடம் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல மனு தாக்கல் செய்தேன்.

4. நான் தாக்கல் செய்துள்ள பிராதின் சொத்து விவரத்தில் எவ்வளவு அடி நீளம் எவ்வளவு அடி அகலம் பாதை வேண்டும் என்ற விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா பிராவில் நான் கோரியுள்ள பரிகாரத்தில் சர்வே எண் 411/4, 6, 7, 8 ஆகிய சொத்துக்களின் விஸ்தீரணம் என்ன என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி நான்கு சொத்துக்களுக்கும் யார் பெயரில் பட்டா உள்ளது என்று விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி 4 இலக்க சொத்துக்களின் பட்டாதாரர்களை நான் தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் நஞ்சை நிலத்தில் வீடு கட்டி உள்ளதற்கு பஞ்சாயத்தில் பெற்ற ஒப்புதலையோ அல்லது வீட்டின் வரைபடத்தையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பாதை கோரியுள்ள சர்வே எண்களான 411/4, 6, 7, 8 ஆகிய சொத்துக்கள் என்ன வகைப்பாடு என்று நான் குறிப்பிடவில்லை என்றான் சரிதான். பொதுவாக வசதியுரிமை சட்டத்தின்படி பாதை கேட்க வேண்டும் என்றால் மனை இடங்களுக்கு மட்டும் தான் கேட்க முடியும் என்றும் நஞ்சை புஞ்சை நிலங்களுக்கு கேட்க முடியாது என்றும் சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

5. பொதுவாக நஞ்சை நிலங்களில் வரப்பை தான் பாதையாக பயன்படுத்த வேண்டும் என்றால் சரியல்ல நஞ்சை நிலத்தில் ரோடு போட்டு தருவார்கள். நான் தாவா சொத்தில் பாதை கோரி மனுசெய்து உள்ளதால் தாவா வழக்கில் அரசு அதிகாரிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

**(பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**